# பாடம் - 1. கலங்கரை விளக்கம்

## வகுப்பு : VII

## பாடம் : தமிழ்

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1.வேயாமாடம் எனப்படுவது ..........

அ) வைக்கோலால் வேயப்படுவது　　**ஆ) சாந்தினால் பூசப்படுவது**

இ) ஓலையால் வேயப்படுவது　　ஈ) துணியால் மூடப்படுவது

2. உரவுநீர் அழுவம் - இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள்

அ) காற்று　　ஆ) வானம்　　**இ) கடல்**　　ஈ) மலை

3.கடலில் துறை அறியாமல் கலங்குவன .......

அ) மீன்கள்　　**ஆ) மரக்கலங்கள்**　　இ) தூண்கள்　　ஈ) மாடங்கள்

4. தூண் என்னும் பொருள் தரும் சொல் .....

அ) ஞெகிழி　　ஆ) சென்னி　　இ) ஏணி　　**ஈ) மதலை**

### ஆ. குறுவினா

**1. மரக்கலங்களைத் துறை நோக்கி அழைப்பது எது?**

- மரக்கலங்களைத் துறை நோக்கி அழைப்பது கலங்கரை விளக்கம்.
- கடலில் துறை அறியாமல் கலங்கும் மரக்கலங்களைத் தன்னை நோக்கி கலங்கரை விளக்கம் அழைப்பதாகக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் தம் பாடலில் அழகாக சிறப்பித்துக் கூறுகிறார்.

**2. கலங்கரை விளக்கில் எந்நேரத்தில் விளக்கு ஏற்றப்படும்?**

கலங்கரை விளக்கில் இரவு நேரத்தில் விளக்கு ஏற்றப்படும்.

### இ. சிறுவினா

**1. கலங்கரை விளக்கம் பற்றிப் பெரும்பாணாற்றுப்படை கூறும் கருத்துகளை எழுதுக.**

- கலங்கரை விளக்கமானது வானம் கீழே விழாமல் தாங்கிப் பிடிக்கும் தூண் போலத் தோற்றமளிக்கிறது. ஏணி கொண்டு ஏற முடியாத அளவிற்கு உயரமாக உள்ளது.
- திண்மையான அதாவது திடமான கலவைச் சாந்து கொண்டு பூசப்பட்ட வானத்தை முட்டும் மாடத்தை உடையது.
- இந்த கலங்கரை விளக்கத்தில் இரவில் ஏற்றப்பட்ட எரியும் விளக்கு , திசை தெரியாமல் தவிக்கும் மரக்கலங்களைத் தன் துறை நோக்கி அழைப்பதாக புலவர்தம் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

## ஈ. சிந்தனை வினா

**1. கலங்கரை விளக்கம் கப்பல் ஓட்டிகளைத் தவிர வேறு யாருக்கெல்லாம் பயன்படும் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

- கடலில் சென்று மீன் பிடிக்கும் மீனவர்கள் மீன் பிடித்து திரும்பவும் கரை சேரவும் இக்கலங்கரை விளக்கம் பெரிதும் துணை புரிகின்றது.
- கடற்பயணம் சென்று கரை திரும்பும் பயணிகளுக்கு இக்கலங்கரை விளக்கம் சிறந்த வழிகாட்டியாக விளங்குகிறது.

## கவிதைப்பேழை - கவின்மிகு கப்பல்

## அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. இயற்கை வங்கூழ் ஆட்ட - அடிக்கோடிட்ட சொல்லின் பொருள்
   அ) நிலம் ஆ) நீர் **இ) காற்று** ஈ) நெருப்பு

2. மக்கள் ..................... ஏறி வெளிநாடுகளுக்குச் சென்றனர்.
   அ) கடலில் ஆ) காற்றில் இ) கழனியில் **ஈ) வங்கத்தில்**

3.புலால் நாற்றம் உடையதாக அகநானூறு கூறுவது .................
   அ) காற்று ஆ) நாவாய் **இ) கடல்** ஈ) மணல்

4. 'பெருங்கடல்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
   அ) பெரு + கடல் **ஆ) பெருமை + கடல்**
   இ) பெரிய + கடல் ஈ) பெருங் + கடல்

5.இன்று + ஆகி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .......
   அ) இன்று ஆகி ஆ) இன்றி ஆகி **இ) இன்றாகி** ஈ) இன்றா ஆகி

6. எதுகை இடம்பெறாத இணை ..........
   **அ) இரவு - இயற்கை** ஆ) வங்கம் - சங்கம்
   இ) உலகு - புலவு ஈ) அசைவு - இசைவு

## ஆ. பொருத்துக

1. வங்கம் - கப்பல்
2. நீகான் - நாவாய் ஓட்டுபவன்
3. எல் - பகல்
4. மாட ஒள்ளெரி - கலங்கரை விளக்கம்

## இ. குறுவினா

**1. நாவாயின் தோற்றம் எவ்வாறு இருந்ததாக அகநானூறு கூறுகிறது?**

நாவாயின் தோற்றம் : உலகம் புடைபெயர்ந்தது போன்ற அழகு

பொருந்திய தோற்றத்தை உடையது நாவாய் என்று அகநானூறு நாவாயின் தோற்றத்தைப் பற்றி கூறுகிறது.

**2. நாவாய் ஓட்டிகளுக்குக் காற்று எவ்வாறு துணை செய்கிறது?**

இரவும் பகலும் ஓரிடத்தும் தங்காமல் வீசுகின்ற காற்றானது நாவாயை அசைத்துச் செலுத்தி நாவாய் ஓட்டிகளுக்கு உறுதுணையாக நிற்கிறது.

## ஈ. சிறுவினா

**1.கடலில் கப்பல் செல்லும் காட்சியை அகநானூறு எவ்வாறு விளக்குகிறது?**

- உலகம் புடைபெயர்ந்தது போன்ற அழகு பொருந்திய தோற்றத்தை உடையது நாவாய்.
- அந்த நாவாய் புலால் நாற்றமுடைய அலைவீசும் பெரிய கடலின் நீரைப் பிளந்து கொண்டு செல்லும்.
- இரவும் பகலும் ஓரிடத்தும் தங்காமல் வீசுகின்ற கடற்காற்றானது நாவாயை அசைத்துச் செலுத்த பெரிதும் துணை புரிகின்றது.
- உயர்ந்த கரையை உடைய மணல் நிறைந்த துறைமுகத்தில் கலங்கரை விளக்கத்தின் ஒளியால் திசை அறிந்து நாவாய் ஓட்டுபவன் நாவாயைச் செலுத்துவான் என்று அகநானூறு கடலில் கப்பல் செல்லும் காட்சியை விளக்குகிறது.

## உ. சிந்தனை வினா

**1. தரைவழிப் பயணம், கடல்வழிப் பயணம் ஆகியவற்றுள் நீங்கள் விரும்புவது எது? ஏன்?**

- நான் விரும்பும் பயணம் கடல்வழிப் பயணம்.
- ஏனென்றால் கடலில் செல்லும் போது கடலில் வீசும் இதமான காற்று உடலை வருடிச் செல்லும். மேலும் கீழுமாக தாவிச் செல்லும் அலைகள் காண்பதற்கு கவினுற அமைந்திருக்கும்.
- கடலில் வாழும் பல்வகை மீன்கள் கடல் நீரில் நீந்திச் செல்லும் காட்சி பார்ப்பதற்கு மிக அழகாக இருக்கும்.
- இரவு நேரத்தில் கப்பலிலிருந்து ஆகாயத்தைப் பார்க்கும் போது பல்வகை விண்மீன்கள் மற்றும் நிலவு நம்முடனே பயணிப்பது போன்ற தோற்றம் நம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

# உரைநடை - தமிழரின் கப்பற்கலை

## அ.சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1.தமிழர்கள் சிறிய நீர்நிலைகளைக் கடக்கப் பயன்படுத்தியது ........

அ) கலம் ஆ) வங்கம் இ) நாவாய் **ஈ) ஓடம்**

2. தொல்காப்பியம் கடற்பயணத்தை ...................... வழக்கம் என்று கூறுகிறது.

அ) நன்னீர் ஆ) தண்ணீர் **இ) முந்நீர்** ஈ) கண்ணீர்

3.கப்பலை உரிய திசையில் திருப்புவதற்குப் பயன்படும் கருவி ..................

**அ) சுக்கான்** ஆ) நங்கூரம் இ) கண்ண டை ஈ) சமுக்கு

## ஆ.கோடிட்ட இடங்களை நிரப்புக

1. கப்பல் கட்டுவதற்குப் பயன்படும் மர ஆணிகள் **தொகுதி** என அழைக்கப்படும்.
2. கப்பல் ஓரிடத்தில் நிலையாக நிற்க உதவுவது **நங்கூரம்**
3. இழைத்த மரத்தில் காணப்படும் உருவங்கள் எனக் குறிப்பிடப்படும். **கண்ணடை**

## இ. பொருத்துக.

1. எரா - அடிமரம்
2. பருமல் - குறுக்கு மரம்
3. மீகாமன் - கப்பலைச் செலுத்துபவர்
4. காந்த ஊசி - திசைகாட்டும் கருவி

## ஈ. தொடர்களில் அமைத்து எழுதுக

1. **நீரோட்டம் -** கடல் நீரோட்டங்களின் திசையை தமிழர்கள் தம் பட்டறிவால் நன்கு அறிந்திருந்தனர்.

2. **காற்றின் திசை -** காற்றின் திசையை அறிந்து கப்பல்களைச் செலுத்தும் முறையைத் தமிழர்கள் நன்கு அறிந்திருந்தனர்.

3. **வானியல் அறிவு -** கப்பல் ஓட்டும் மாலுமிகள் சிறந்த வானியல் அறிவைப் பெற்றிருந்தனர்.

4. **ஏற்றுமதி -** பூம்புகார் துறைமுகத்திலிருந்து கப்பல்கள் மூலம் பொருள்கள் ஏற்றுமதியும் இறக்குமதியும் செய்யப்பட்டன.

## உ. குறுவினா

**1. தோணி என்னும் சொல்லின் பெயர்க்காரணத்தைக் கூறுக.**

- எடைக் குறைந்த பெரிய மரங்களின் உட்பகுதியைக் குடைந்து எடுத்துவிட்டுத்த தோணியாகப் பயன்படுத்தினர் தமிழர்கள்.
- உட்பகுதி தோண்டப்பட்டவை என்பதால் அவை தோணிகள் எனப்பட்டன.
- சிறிய நீர்நிலைகளைக் கடக்கத் தமிழர்கள் தோணியைப் பயன்படுத்தினர்.

AKSHAYA ACADEMY MATRIC. Hr. Sec. SCHOOL KOSAVAPATTY KNOWLEDGE IS POWER

**2. கப்பல் கட்டும்போது மரப்பலகைகளுக்கு இடையே தேங்காய் நார் அல்லது பஞ்சு வைப்பதன் நோக்கம் என்ன?**

- மரங்களையும் பலகைகளையும் ஒன்றோடு ஒன்று இணைக்கும் போது அவற்றுக்கு இடையே தேங்காய் நார், பஞ்சு ஆகியவற்றில் ஒன்றை வைத்து நன்றாக இறுக்கி ஆணிகளை அறைந்தனர்.
- சுண்ணாம்பையும் சணலையும் கலந்து அரைத்து அதில் எண்ணெய் கலந்து கப்பலின் அடிப்பகுதியில் பூசினர்.
- இதனால் கப்பல்கள் பழுதடையாமல் நெடுங்காலம் உழைத்தன.

**3. கப்பல் உறுப்புகள் சிலவற்றின் பெயர்களைக் கூறுக.**

- கப்பல் பல்வேறு வகையான உறுப்புகளை உடையது.
- எரா, பருமல், வங்கு , கூம்பு, பாய்மரம், சுக்கான், நங்கூரம் போன்றவை கப்பலின் உறுப்புகளுள் சிலவாகும்.

## ஊ. சிறுவினா

**1. சிறிய நீர்நிலைகளையும் கடல்களையும் கடக்கத் தமிழர்கள் பயன்படுத்திய ஊர்திகளின் பெயர்களை எழுதுக.**

- தமிழர்கள் தோணி, ஓடம், படகு, புணை, மிதவை, தெப்பம் போன்றவற்றைச் சிறிய நீர்நிலைகளைக் கடக்கப் பயன்படுத்தினர்.
- கலம், வங்கம், நாவாய் முதலியவை அளவில் பெரியவை.
- இவற்றைக் கொண்டு தமிழர்கள் கடல் பயணம் மேற்கொண்டனர்.

**2. பண்டைத் தமிழரின் கப்பல் செலுத்தும் முறை பற்றி எழுதுக.**

கப்பலைச் செலுத்தும் முறை :

- காற்றின் திசையை அறிந்து கப்பல்களைச் செலுத்தும் முறையைத் தமிழர்கள் நன்கு அறிந்திருந்தனர்.
- இவ்வுண்மையை வெண்ணிக்குயித்தியார் தம் புறப்பாடலில் குறிப்பிடுகிறார். "நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி வளி தொழில் ஆண்ட உரவோன் மருக - வெண்ணிக் குயத்தியார்
- கடலில் காற்று வீசும் திசை, கடல் நீரோட்டங்களின் திசை ஆகியவற்றைத் தமிழர்கள் தம் பட்டறிவால் நன்கு அறிந்து அவற்றுக்கு ஏற்ப உரிய காலத்தில் சரியான திசையில் கப்பலைச் செலுத்தினர்.

**3. கப்பல் பாதுகாப்பானதாக அமையத் தமிழர்கள் கையாண்ட வழிமுறைகள் யாவை?**

- பெருந்திரளான மக்களையும் பொருள்களையும் ஏற்றிச் செல்லும் வகையில் பெரிய கப்பல்களைத் தமிழர் உருவாக்கினர்.

- நீண்ட தூரம் கடலிலேயே செல்ல வேண்டி இருந்ததால் கப்பல்களைப் பாதுகாப்பனவையாகவும் வலிமைமிக்கவையாகவும் உருவாக்கினர்.
- கப்பல் கட்டுவதற்கு உரிய மரங்களைத் தேர்ந்தெடுப்பதில் தமிழர்கள் மிகுந்த கவனம் செலுத்தினர். தண்ணீரால் பாதிப்பு அடையாத மரங்களையே கப்பல் கட்டப் பயன்படுத்தினர். நீர்மட்ட வைப்பிற்கு வேம்பு, இலுப்பை, புன்னை, நாவல் போன்ற மரங்களைப் பயன்படுத்தினர்.
- பக்கங்களுக்குத் தேக்கு, வெண்தேக்கு போன்ற மரங்களைப் பயன்படுத்தினர். நீளம், அகலம், உயரம் ஆகியவற்றைச் சரியான முறையில் கணக்கிட்டுக் கப்பலை உருவாக்கினர்.
- மரங்களையும் பலகைகளையும் இணைக்கும் போது அவற்றுக்கு இடையே தேங்காய் நார் அல்லது பஞ்சு இவற்றில் ஒன்றை வைத்து இறுக்கி ஆணிகளை அறைந்தனர். மரத்தால் ஆன ஆணிகளையே பயன்படுத்தினர்.

**எ. சிந்தனை வினா**

**1. இக்காலத்தில் மக்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு கடற்பயணத்தைப் பெரிதும் மேற்கொள்ளாதது ஏன் எனச் சிந்தித்து எழுதுக.**

- தற்போது விமானம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, கடற்வழி பயணம் விரும்பத்தகாத ஒன்றாக மாறிவிட்டது. காலதாமதம் காரணமாக தற்பொழுது கடல் வழி பயணத்தைத் தவிர்த்து வான்வெளிப் பயணத்தை ஏற்றனர்.
- அதன் காரணமாகவே கடற்வழிப் பயணத்தை பெரிதும் மேற்கொள்ளுதலைத் தவிர்த்தனர்.

## விரிவானம் - ஆழ்கடலின் அடியில்

**1. ஆழ்கடலில் அடியில்' கதையைச் சுருக்கி எழுதுக.**

1886 ஆம் ஆண்டு கடலில் செல்லும் பெரிய கப்பல்களை, உலோகத்தால் ஆன உடலைக் கொண்ட ஒரு விந்தையான விலங்கு தாக்குவதாகச் செய்தி வெளியானது. அதனைக் கண்டறிய நியூயார்க் நகரிலிருந்து போர்க்கப்பல் ஒன்று புறப்பட்டது. அதில் விலங்கியல் பேராசிரியரான பியரி , அக்கப்பலின் தலைவர் ஃபராகட், திமிங்கலங்களை வேட்டையாடும் நெட் என்ற வீரர் மற்றும் பியரியின் உதவியாளர் கான்சீல் ஆகியோர் சென்றனர்.

மூன்று மாதங்கள் அவர்கள், அமெரிக்காவுக்கும், ஜப்பானுக்கும் உள்ள பெருங்கடல் பரப்பில் தேடினார்கள். அவ்விலங்கு கண்ணில் படவில்லை. அதனால் அவர்கள் தங்கள் நகரத்திற்குத் திரும்ப எண்ணினர். அப்போது பளபளப்பான உடலைக் கொண்ட விலங்கு கப்பலை நோக்கி வந்தது. நெட்

வலிமை வாய்ந்த ஈட்டிகளை எய்தார். அவ்விலங்கு வேகமாக மோதியதில் அவர்கள் கப்பலில் இருந்து தூக்கி வீசப்பட்டனர். மயக்கமடைந்த பியரி கண் விழித்த போது, பியரி, நெட், கான்சீல் ஆகியோர் அவ்விலங்கின் மீது அமர்ந்திருந்தனர். நெட், “இது விலங்கு இல்லை ; ஒரு நீர்மூழ்கிக்கப்பல்” என்று கூறினார்.

மூவரும் அக்கப்பலின் உள்ளிருப்பவர்களை உதவிக்கு அழைத்தனர். கதவு திறக்கப்பட்டது. கப்பலின் உள்ளிருந்து வந்தவர்கள் மூவரையும் சிறைப்பிடித்தனர். நெமோ என்று ஒருவர் இம்மூவரிடம் பேசினார். “நாட்டிலஸ் என்னும் இந்த நீர்மூழ்கிக் கப்பலை ஒரு விந்தையான விலங்கு என்று நம்ப வைத்திருக்கிறோம். இவ்வுண்மை தெரிந்த உங்களை விடமாட்டேன்” என்று கூறினார்.

கப்பலினுள் எல்லா இடங்களுக்கும் சென்றனர். அதில் நூலகம் மற்றும் அருங்காட்சியகம் ஆகிய அரிய அறிவுக் கருவூலங்கள் யாருக்கும் பயன்படாமல் இருந்தன. கப்பலின் இயங்குமுறைகளைப் பற்றி நெமோவிடம் கேட்டறிந்தனர். கப்பலில் உள்ளோர் மூச்சு விடுவதற்கான காற்று எவ்வாறு கிடைக்கிறது என்பது பற்றியெல்லாம் கூறினார் நெமோ. ஒருநாள் கப்பல் கடலுக்குள் இருக்கும் மணல் திட்டில் சிக்கிக் கொண்டது. நாட்டிலஸின் மேல்தளத்தில் நின்றபோது பக்கத்தில் ஒரு தீவு தெரிந்தது. இம்மூவரும் நெமோவிடம் அனுமதி பெற்று படகில் சென்று அத்தீவில் காய்கறிகளை வாங்கிக் கொண்டு படகில் ஏற்றினர்.

அத்தீவைச் சார்ந்த, மனிதர்களைக் கொன்று தின்னும் வழக்கமுடையவர்கள் துரத்தினார்கள். மூவரும் தப்பித்துக் கப்பலுக்குள் வந்துவிட்டனர். ஆனால் அம்மனிதர்கள் பல படகுகளில் வந்து கப்பலைச் சூழ்ந்து கொண்டனர். ஏழு நாட்களுக்குப் பிறகு மேல் மூடியைத் திறந்தார். அந்த மனிதர்கள் ஏணியில் ஏற முயன்றனர். நெமோ அதில் மின்சாரத்தைப் பாய்ச்சி இருந்ததால் ஓடிவிட்டனர்.

பல நாட்களுக்குப் பிறகு இந்தியாவுக்கும் இலங்கைக்கும் அருகில் நாட்டிலஸ் சென்று கொண்டிருந்தது. முத்துச் சிப்பிகளைச் சேகரிக்க நெமோவும் பியரியும் கடலுக்குள் சென்றனர். அப்போது முத்துக் குளிப்பதற்காக ஓர் இந்தியர் கடலுக்குள் இறங்கியதைப் பார்த்தனர். அவரைச் சுறாமீனிடமிருந்து காப்பாற்றினர்.

வழியில் போரின்போது கடலில் மூழ்கடிக்கப்பட்ட கப்பலைப் பார்த்தனர். அதில் 5 இருந்த தங்கம், வெள்ளி, வைரம் போன்றவற்றை எடுத்துக் கொண்டனர். கடலினுள் உள்ள எரிமலை, கடலுக்குள் மூழ்கிய அட்லாண்டிஸ் நகர இடிபாடுகளைக் கண்டனர். பூமியின் தென் துருவத்தில் பெங்குவின், கடல்

சிங்கம் போன்ற அரிய பறவைகளையும் விலங்குகளையும் கண்டனர். ஆக்டோபஸ் ஒன்றைக் கொன்றனர்.

மூவரும் தப்பிக்க முயன்றனர். அதனால் கப்பலுடன் இணைக்கப்பட்ட படகில் ஏறினர். அப்போது நாட்டிலஸ் கடல் சுழலுக்குள் சிக்கிக் கொண்டது. இம்மூவரும் கடலுக்குள் வீசப்பட்டனர். மயக்கம் தெளிந்த போது நார்வே நாட்டில் ஒரு மீனவரின் குடிசையில் இருந்தனர். நெமோ பற்றியும் நாட்டிலஸ் பற்றியும் யாருக்கும் எந்தச் செய்தியும் கிடைக்கவில்லை

## கற்கண்டு - இலக்கியவகைச் சொற்கள்

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. சரி எல்லார்க்கும் எளிதில் பொருள் விளங்கும் சொல் ................

   **அ) இயற்சொல்**   ஆ) திரிசொல்   இ) திசைச்சொல்   ஈ) வடசொல்

2. பலபொருள் தரும் ஒரு சொல் என்பது .........................

   அ) இயற்சொல்   **ஆ) திரிசொல்**   இ) திசைச்சொல்   ஈ) வடசொல்

3. வடமொழி என்று அழைக்கப்படும் மொழி ...............................

   அ) மலையாளம்   ஆ) கன்னடம்   **இ) சமஸ்கிருதம்**   ஈ) தெலுங்கு

### ஆ. பொருத்துக

1. இயற்சொல் - சோறு
2. திரிசொல் - அழுவம்
3. திசைச்சொல் - பெற்றம்
4. வடசொல் - இரத்தம்

### இ. குறுவினா

**1. மண், பொன் என்பன எவ்வகைச் சொற்கள்?**

- எளிதில் பொருள் விளங்கும் வகையில் அமைந்த சொற்கள் இயற்சொற்கள் எனப்படும்.
- இயற்சொல் பெயர், வினை, இடை, உரி ஆகிய நான்கு வகையிலும் வரும்.
- மண், பொன் - பெயர் இயற்சொல்

**2. இயற்சொல்லின் நான்கு வகைகள் யாவை?**

- இயற்சொல்லின் நான்கு வகைகள்.
- இயற்சொல் பெயர், வினை, இடை, உரி ஆகியன நான்கு வகைகளாகும்.

**எடுத்துக்காட்டு :**

மண், பொன் - பெயர் இயற்சொல்

நடந்தான், வந்தான் - வினை இயற்சொல் அவனை,

அவனால் - இடை இயற்சொல்
மாநகர் - உரி இயற்சொல்

**3. குங்குமம், கமலம் என்பன எவ்வகை வடசொற்கள்?**

கமலம், குங்குமம் என வடமொழியில் இருப்பது போன்றே தமிழில் எழுதுவதைத் தற்சமம் என்பர்.

## ஈ. சிறுவினா

**1. இலக்கிய வகைச் சொற்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

இலக்கிய வகைச் சொற்கள் நான்கு வகைப்படும்

- இயற்சொல்,
- திரிசொல்,
- திசைச்சொல்,
- வடசொல்

**(i) இயற்சொல் :** எளிதில் பொருள் விளங்கும் வகையில் அமைந்த சொற்கள் இயற்சொற்கள் எனப்படும். எடுத்துக்காட்டு : கடல், கப்பல்

**(ii) திரிசொல் :** கற்றோருக்கு மட்டுமே விளங்குவதாகவும் இலக்கியங்களில் மட்டுமே பயின்று வருபவையாகவும் அமையும் சொற்கள் திரிசொற்கள் எனப்படும். எடுத்துக்காட்டு : வங்கூழ், அழுவம்.

**(iii) திசைச்சொல் :** வடமொழி தவிர, பிறமொழிகளில் இருந்து வந்து தமிழில் இடம்பெறும் சொற்கள் திசைச்சொற்கள் எனப்படும். எடுத்துக்காட்டு: சாவி, சன்னல்.

**(iv) வடசொல் :** வடமொழியிலிருந்து வந்து தமிழில் இடம் பெறும் சொற்கள் வடசொற்கள் எனப்படும். எடுத்துக்காட்டு: வருடம், மாதம்

**2. திரிசொல்லின் வகைகள் குறித்து விளக்குக.**

திரிசொற்களை ஒரு பொருள் குறித்த பல திரிசொற்கள் எனவும். பல பொருள் குறித்த ஒரு திரிசொல் எனவும் இருவகைப்படுத்தலாம்.

**ஒரு பொருள் குறித்த பல திரிசொற்கள்**

எடுத்துக்காட்டு: வங்கம், அம்பி, நாவாய் - என்பன கப்பல் என்னும் ஒரே பொருளைத் தருவதால் ஒரு பொருள் குறித்த பல திரிசொற்கள் என்பர்.

**பல பொருள் குறித்த ஒரு திரிசொல் :**

எடுத்துக்காட்டு: இதழ் என்னும் சொல் பூவின் இதழ், உதடு, கண்ணிமை, பனையேடு, நாளிதழ் ஆகிய பல பொருள்களைத் தருவதால் பலபொருள் குறித்த ஒரு திரிசொல் என்பர்.

ACADEMY MATRIC. Hr. Sec. SCHOOL KOSAVAPATTY KNOWLEDGE IS POWER

**3. பண்டிகை, கேணி என்பன எவ்வகைச் சொற்கள்? விளக்குக.**

- பண்டிகை, கேணி என்பன திசைச் சொற்களாகும்.
- வடமொழி தவிர, பிற மொழிகளில் இருந்து வந்து தமிழில் இடம்பெறும் சொற்கள் திசைச் சொற்கள் எனப்படும்.
- முற்காலத்தில் பாண்டி நாட்டைத் தவிர, தமிழ்நாட்டின் பிற பகுதிகளில் வழங்கிய கேணி (கிணறு, பெற்றம் (பசு) போன்ற சொற்களையும் திசைச்சொற்கள் என்றே வழங்கினர்.

**உ. கட்டங்களை நிரப்புக.**

| வேர்ச்சொல் | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| நட | நடந்தாள் | நடக்கிறாள் | நடப்பாள் |
| எழுது | எழுதினாள் | எழுதுகிறாள் | எழுதுவாள் |
| ஓடு | ஓடினாள் | ஓடுகிறாள் | ஓடுவாள் |
| சிரி | சிரித்தாள் | சிரிக்கிறாள் | சிரிப்பாள் |
| பிடி | பிடித்தாள் | பிடிக்கிறாள் | பிடிப்பாள் |
| இறங்கு | இறங்கினாள் | இறங்குகிறாள் | இறங்கவாள் |

**ஊ. பொருத்தமான காலம் அமையுமாறு திருத்தி எழுதுக.**

1. அமுதன் நேற்று வீட்டுக்கு வருவான்.
   அமுதன் நேற்று வீட்டுக்கு வந்தான்.
2. கண்மணி நாளை பாடம் படித்தாள்.
   கண்மணி நாளை பாடம் படிப்பாள்.
3. மாடுகள் இப்பொழுது புல் மேயும்.
   மாடுகள் இப்பொழுது புல் மேய்கிறது.
4. ஆசிரியர் நாளை சிறுதேர்வு நடத்தினார்.
   ஆசிரியர் நாளை சிறுதேர்வு நடத்துவார்.
5. நாங்கள் நேற்றுக் கடற்கரைக்குச் செல்கிறோம்.
   நாங்கள் நேற்றுக் கடற்கரைக்குச் சென்றோம்.

**எ. கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

**பயணங்களின் பலவகை**

**முன்னுரை :**

பயணம் என்பது சங்ககாலம் முதல் நிகழ்ந்து வருகின்றது. நடைபயணமாகத் தொடங்கிய பயணத் தோற்றம் அறிவியல் வளர்ச்சியால்

SAYA ACADEMY MATRIC. Hr. Sec. School KOVAPATTY KNOWLEDGE IS POWER

இன்று பல்வேறு மாறுதல்களுக்கு உள்ளாகி இருக்கின்றது. பயண நேரம் இன்று மிகவும் சுருங்கிவிட்டது.

**பயணத்தின் தேவை :**

மனிதன் தன்னுடைய அடிப்படைத் தேவைகளுக்காவும், பண்டமாற்று முறைக்காகவும், பொருட்களைவாங்கவும் விற்கவும் சந்தைப்படுத்தவும். தம் உறவினர் மற்றும் நண்பர்களைத் தொடர்பு கொள்வதற்கும், மருத்துவத் தேவைக்காகவும் பயணத்தின் தேவை ஏற்பட்டது. பயணத்தின் தன்மைக் கேற்ப தரைவழிப்பயணம், கடல்வழிப்பயணம், வான்வழிவழிப் பயணம் என வகைப்படுத்தப்பட்டது.

**தரை வழிப்பயணம் :**

பழங்காலம் முதல் தரைவழிப்பயணமே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. நடைபயணமாகவே ஆரம்ப கால கட்டத்தில் பயணம் மேற்கொள்ளப்பட்டது.மாட்டு வண்டி, குதிரை வண்டியின் மூலம் நடைபெற்ற தரைவழிப் பயணம். பின்னர் அறிவியல் வளர்ச்சியின் காரணமாக மிதிவண்டி, மகிழ்வுந்து, பேருந்து, சரக்குந்து, தொடர்வண்டி ஆகியவை மூலம் தரைவழிப்பயணம் விரைவாக மேற்கொள்ளப்பட்டது.

**கடல்வழிப்பயணம் :**

கப்பல் போன்றவற்றில் கடல்வழியாகச் செல்லும் பயணம் கடல்வழிப்பயணம் ஆகும். கடலின் அழகைக் கண்டு மகிழவும், கடல் வாழ் உயிரினங்களைப் பார்க்கவும், கடல் தீவுகளின் இயற்கைக் காட்சிகளை கண்டு மகிழவும் கடல்வழிப் பயணமே சிறந்தது. தீவுகள் மற்றும் வெகு தொலைவு நாடுகளுக்குப் பொருட்களை அனுப்பவும் , அயல் நாடுகளுக்கு வணிகம் செய்யவும் கடல்வழிப்பயணம் பயன்பட்டது.

**வான் வழிப்பயணம்** :

விமானம் உள்ளிட்ட வாகனங்கள் மூலம் வான்வழியில் பயணம் மேற்கொள்வது வான்வழிப்பயணம் ஆகும். தரை மற்றும் கப்பல் வழி பயணங்களைவிடச் சிறந்தது வான்வழிப்பயணம். பல நாட்கள் செல்ல வேண்டிய பயணத்தை ஒருசில மணி நேரங்களிலேயே செல்லலாம். அதிவிரைவுக்கு ஏற்றது வான்வழிப் பயணம்.

**முடிவுரை**:

பயணம் செய்வதில் பாதுகாப்பான முறைகளை அறிந்து பயன்படுவது

பயணிகளாகிய நம் கடமையாகும். பயணத்தில் வீண் விளையாட்டுக்களைத் தவிர்க்க வேண்டும்.

**("பயணத்தில் தேவை கவனம்")**

**ஏ. குறிப்புகளைக் கொண்டு 'மா' என்னும் எழுத்தில் தொடங்கும் சொற்களைக் கண்டறிந்து கட்டங்களை நிரப்புக.**

1. முக்கனிகளுள் ஒன்று
2. கதிரவன் மறையும் நேரம்
3. பெருந்திரளான மக்கள் கூடும் நிகழ்வு
4. எழுத்துகளை ஒலிக்க ஆகும் கால அளவு
5. அளவில் பெரிய நகரம்

| | | | | |
|---|---|---|---|---|
| மா | | | | |
| மா | லை | | | |
| மா | நா | டு | | |
| மா | த் | தி | ரை | |
| மா | ந | க | ர | ம் |

AKSHAYA ACADEMY MATRIC. Hr. Sec. SCHOOL
KOSAVAPATTY
KNOWLEDGE IS POWER